# கட்டான பிரதேச சபை
# கம்பஹா மாவட்டம்

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆம் திகதியும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2013 செப்தெம்பர் 24 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, கட்டான பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டான பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிர்மாணிக்கப்பட்ட/ நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற 05 மக்கள் ஒன்றுகூடல் மண்டபங்களின் கிரயத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா

3,165,772 கூட்டுத்தொகையால் நிலையான சொத்து அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையால் செலுத்தப்பட்ட மற்றும் அறவிடப்பட்ட பெறுமதி சேர் வரி தொடர்பாக சரியான கணக்கு வைத்தல்கள் இன்றி அறவிடப்பட்ட வாடகைப் பெறுமதியான ரூபா 4,194,318 மாத்திரமே செலுத்த வேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 53,253,285 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,549,660 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 29,433 | 22,214 | 30,930 |
| (ii) | வாடகை | 1,307 | 947 | 411 |
| (iii) | ஏனைய வருமானம் | 750 | 607 | 199 |

**2.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

கையிலுள்ள காசு மற்றும் உப அலுவலகத்தின் சேகரிப்புக் கணக்குகளில் பணம் பாரியளவில் குறித்த வகையில் நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்படாது கையில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தமையால் நிதியத்தின் மீதி மேலதிகப்பற்றாகியிருந்தது. நிதியத்தின் வங்கிக் கணக்கு தொடர்பாக வேறான கணக்குகள் பேணப்பட்டிராமையால் வங்கி மேலதிகப்பற்று புத்தகங்களிலிருந்து வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

**2.4 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

2012 ஆம் ஆண்டின் போது உதம்மிட்ட மக்கள் ஒன்றுகூடல் மண்டபம் (புதியது) நிர்மாணிக்கப்படுவதற்கான அங்கீகரிக்கப்பட்ட ரூபா 3,000,000 தொகை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.5 ஒப்பந்தக் கட்டுப்பாடு**

**(அ) உதம்மிட்ட மக்கள் ஒன்றுகூடல் மண்டபம் (புதியது) நிர்மாணிப்பு**

2008 ஆம் ஆண்டில் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்திட்டத்திற்காக தற்போது ரூபா 4,274,059 செலவிடப்பட்டிருந்த போதிலும் நிர்மாணிப்பு வேலைகள் பூர்த்தியடைந்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) உதம்மிட்ட மக்கள் ஒன்றுகூடல் மண்டபம் (பழையது) நிர்மாணிப்பு**

2008 ஆம் ஆண்டில் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்திட்டத்திற்காக ரூபா 421,291 செலவிடப்பட்டிருந்ததுடன் அந் நிர்மாணிப்பு வேலைகள் பூர்த்தியடைந்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) மல்பெரிவத்தை நீர்த் திட்ட நிர்மாணிப்பு**

2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்திட்டத்தின் நிர்மாணிப்பு வேலைகள் பூர்த்தியடைந்து எதிர்பார்க்கப்பட்டவாறு 820

குடும்பங்களின் நீர் தேவைப்பாட்டைப் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) சொத்து முகாமைத்துவம்